## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண் - ந.க.எண் 6570/2020/ எம்.சி. 8**

**நாள் - 07.09.2020 காலை 10.30 மணி**

**தலைமை - திரு.பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கலந்துகொண்டோர் - துணை ஆணையர்,**
**அனைத்து துறை தலைமைகள்,**
**அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

---

## பொருள் எண் 1

பொருள் : வழக்குகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்ற வழக்குகளை நடத்த புதிதாக நியமிக்கப்பட்ட ஒரு மாநகராட்சி நிலை வழக்கறிஞர் பணி நியமனத்திற்கும், இரண்டு சட்ட ஆலோசகர்கள் பணி நியமனத்திற்கும், மாமன்றத்தின் பின்னேற்பிற்கும், சட்ட ஆலோசகர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு மாதாந்திர கட்டணமாக ரூ. 3000/- வழங்குவது குறித்து மாமன்றம் முடிவு செய்யவும் வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. வழக்கறிஞர்களின் 31-07-2020 ந் தேதிய விண்ணப்பங்கள்.
2. ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள் ஆணை உத்தரவு ந.க.எண். 5887/ 2011/ எம்.சி.10 நாள் 06-8-2020.
3. ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள் ஆணை உத்தரவு ந.க.எண். 5887/ 2011/ எம்.சி.10 நாள் 06-8-2020.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி தொடர்பான மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கலாகும் வழக்குகளை எவ்வித தொய்வுமின்றி திறம்பட நடத்தும் குறிக்கோளுடன் அவசர அவசியம் கருதி கூடுதலாக **மாநகராட்சி நிலை வழக்கறிஞராக திரு. K. நாகராஜன், MSW, L.L.B.,** Enroll Ms. No. 3167 (b)/ 2011, எண். 8/20, சுந்தரம் தெரு எண்-4, பி.என். புதுார், கோயம்புத்தூர் - 641 041, செல் எண். 90806 20004 அவர்களையும், **மாநகராட்சி சட்ட ஆலோசகர்களாக** (Legal Advisor) **திரு. ச. வெற்றிவேல், B.B.M., B.L.,** Enroll Ms. No. 2562/ 2012, எண். 44/4, சாந்தி நகர், ஆவாரம்பாளையம், கணபதி, கோயம்புத்தூர்- 641 006, செல் எண். 77084 04832, மற்றும் **திரு. ப. பன்னீர்செல்வம், B.Com., B.L.,** Enroll Ms. No. 1936/ 2014, எண். 4A, மந்த முனியப்பன் கோவில் தெரு, செல்லான்டியம்மன் கோவில் தோட்டம், செட்டிப்பாளையம், கோயம்புத்தூர்-641 201, செல் எண். 72004 43889, ஆகிய இருவரையும் நிர்வாக நலன் கருதி முறையே பார்வை 2 மற்றும் 3ல் காண் ஆணையாளர் அவர்களின் உத்தரவுகளின்படி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981ன் பிரிவு 4(3) உடன் இணைந்த நகராட்சி நடைமுறை நூலின் விதி 55.7-ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின்படியல்லாது, வழக்குகள் சம்பந்தப்பட்ட நியமனம் என்பதால் கால விரயமின்றி மேற்படி நியமனங்கள் செய்யப்பட வேண்டியிருந்தன. எனவே, அவசர அவசியம் கருதி நேரடி நியமன முறையில் திரு. கே. நாகராஜன், M.S.W., Ph.D., L.L.B., அவர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞராகவும், திரு. ச. வெற்றிவேல் B.B.M., B.L., மற்றும் திரு. ப. பன்னீர்செல்வம், B.Com., B.L., ஆகிய இருவரையும் சட்ட ஆலோசகர்களாக (Legal Advisor) நியமனம் செய்ததற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வழங்கலாம். மேலும், சட்ட ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள வழக்கறிஞர்களுக்கு மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கு வழங்குவது போல் மாதாந்திர கட்டணமாக ரூ. 3000/- (ரூபாய் - மூவாயிரம் மட்டும்) வழங்குவது குறித்து மாமன்றம் முடிவு செய்யவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
(i) பின்னேற்பு வழங்கலாம்.
(ii) சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாதாந்திர கட்டணம் வழங்குவது குறித்து முடிவு செய்யலாம்.

ந.க.எண். 5887/ 2011/ எம்.சி.10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 536 நாள் 07.09.2020**

அலுவலகக் குறிப்பு - 1. பின்னேற்பு வழங்கப்பட்டது.
2. மாதாந்திர கட்டணமாக ரூ.3000/- வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – 110 தூய்மை பணியாளர் பணியிடங்களை வெளிமுகமை (Out Sourcing) மூலமாக பூர்த்தி செய்து கொள்ள உத்திரவு பிறப்பிக்கப்பட்டது – அவசர அவசியம் கருதி நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்ய மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக.

**பார்வை**
1. அரசாணை (ப) எண்.55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.13.02.2014.
2. அரசிற்கு அனுப்பிய கடித எண். 4272/2018/ எம்.சி 5, நாள். 08.05.2018 மற்றும் 18.05.2018.
3. அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந4) துறை, அவர்களின் கடித எண்.11623/மாந.4/2018–1, நாள். 25.05.2018.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனைத்து நிலைகளிலும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாக இருந்த 715 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ள மாமன்ற தீர்மான எண். 135, நாள்.29.06.2012ன்படியும், இவ்வலுவலக கடித ந.க.எண். 5734/2011/எம்.சி.2, நாள்.06.07.2012ன் படியும் அனுமதி வழங்குமாறு அரசிற்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டதில் பார்வை 1ல் காணும் அரசாணை (ப) எண்.55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.13.02.2014ன்படி 149 பணியிடங்களை மட்டுமே நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் இதர பணியிடங்களை பொருத்தவரை களப்பணியாளர் பணியிடம் நடைமுறையில் இல்லை என்றும் தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணிகளுக்கான தேவையை ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சி நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், தூய்மைப் பணிகளை வெளிமுகமை (Out Sourcing) மூலம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், துப்புரவு ஆய்வாளர் பதவியினை நிரப்புவது குறித்து பணி விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட தேவையிருப்பதால் அதற்கான உரிய கருத்துரு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரால் அனுப்பப்படுவதாகவும் இவ்வரசாணையில் முடிவெடுக்கப்பட்டது.

பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் இம்மாநகராட்சியில் காலியாக இருந்த 659 தூய்மை பணியாளர் பணியிடங்களை மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி நேரடி நியமனம் மூலமாக பூர்த்தி செய்து கொள்ள அரசின் அனுமதி கோரியதில் பார்வை 3ல் காணும் அரசு கடிதத்தில் மேற்படி 659 தூய்மை பணியாளர் பணியிடங்களில் அரசாணை (ப) எண்.55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.13.02.2014ன்படி 2012ல் காலியாக இருந்த 110 தூய்மை பணியாளர் பணியிடங்களுக்கு மட்டுமே இவ்வரசாணை பொருந்தும் என்றும் மீதமுள்ள தூய்மை பணியாளர் பணியிடங்களுக்கு நியமன அதிகாரி மாநகராட்சி ஆணையாளர் என்பதால் 110 தூய்மை பணியாளர் பணியிடங்களை தவிர்த்து மீதமுள்ள 549 தூய்மை பணியாளர் பணியிடங்களை மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் பேரில் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 325 தூய்மை பணியாளர்களுக்கு கடந்த 06.03.2020ல் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்டனர்.

இம்மாநகராட்சியில் 01.08.2020 அன்று 530 தூய்மை பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. இதில் ஏற்கனவே அரசாணை (ப) எண்.55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.13.02.2014ன்படி வெளிமுகமை (Out Sourcing) மூலம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்ட 110 பணியிடங்களும் அடங்கும்.

தற்போதைய சூழ்நிலையில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கொரானா நோய் தொற்று காரணமாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நபர்களில் நாளதுவரை 150க்கும் மேற்பட்டவர்கள் அவர்களுக்கு உள்ள மற்ற பல்வேறு உடல் உபாதைகளின் காரணமாக உயிர் இழந்துள்ளனர். கொரானா நோய் தொற்று பாதிப்பு ஏற்பட்ட பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது. தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று தினசரி மூன்று வேளை கிருமி நாசினி தெளித்தல் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், உழவர் சந்தைகள் உள்ளிட்ட காய்கறி மற்றும் இறைச்சி சந்தைகள் ஆகிய இடங்களில் வாகனங்களின் மூலமாக தினசரி கிருமி நாசினி தெளித்தல் ஆகிய பணிகளை தூய்மைப் பணியாளர் மேற்கொண்டு வருகின்றனர். அன்றாட சுகாதாரப் பணிகளான குப்பைகள் அகற்றுதல், சாக்கடைகள் தூர் வாருதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வரும் தூய்மைப் பணியாளர்களில் ஒரு பிரிவினர் கொரானா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தற்போது ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக அன்றாட சுகாதார பணிகளில் தேக்கம் ஏற்படும் சூழல் உருவாக வாய்ப்பு உள்ளது.

2011ல் இம்மாநகராட்சியின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு கூடுதலாக ஒரு மண்டலம் தோற்றுவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், அரசாணை எண்.224 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.09.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, 2011ல் இருந்த 4,02,661 மொத்த குடியிருப்புகளில் 250 குடியிருப்புகளுக்கு மூன்று பேர் கொண்ட தூய்மைப்பணியாளர் வீதம் 4830 (4,02,661 / 250 =1610 X 3 = 4830) தூய்மைப் பணியாளர்களும், குப்பைகள் அகற்றும் வாகனங்களுக்கு 389 தூய்மைப் பணியாளர்களும் ஆக மொத்தம் 5219 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படுவதாகவும் இதில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 3226 தூய்மைப்பணியாளர் பணியிடங்கள் நீங்கலாக மீதம் 1993 தூய்மைப் பணியாளர் பணியிடங்களை அனுமதிக்கக் கோரி அரசிற்கு 14.05.2013ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனை பரிசீலித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தமது கடித ந.க.எண்.44583/2012/மாநஅ1 நாள்.19.06.2013ல் கூடுதலாக 1474 தூய்மைப் பணியாளர் பணியிடங்களை இம்மாநகராட்சிக்கு தோற்றுவிக்க அரசிற்கு பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கான அரசின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை.

இம்மாநகராட்சியில் 31.07.2020ல் 4,70,817 குடியிருப்புகள் உள்ளது. மக்கள் தொகை சுமார் 17.50 லட்சமாக உள்ளது. இதன் காரணமாக தூய்மைப் பணியாளர் பணியிடமானது அத்தியாவசிய தேவையாக உள்ளது. மேலும், மாநகராட்சி எல்லை விரிவாக்கத்திற்கு பின்னர் புதிதாக தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் ஏதும் அரசால் அனுமதிக்கப்படாததலும் கொரானா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தூய்மைப் பணியாளர்கள் முன்கள பணியாளர்களாக இருப்பதாலும், கொரானா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை பணிகளை தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், அரசாணை (ப) எண்.55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள்.13.02.2014ல் விதிக்கப்பட்ட 110 தூய்மை பணியாளர் பணியிடங்களை வெளிமுகமை (Out Sourcing) மூலமாக மட்டுமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை தளர்வு செய்து மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி 110 தூய்மை பணியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்து கொள்ள மாமன்ற அனுமதி கோரி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்கு பின்னர் 110 தூய்மை பணியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அரசின் பின்னேற்பு பெறலாம்.

ந.க.எண்.4272/2018/எம்.சி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 537 நாள் 07.09.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் உரிம காலம் முடிவுற்ற வணிக வளாக கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிம புதுப்பித்தல் தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007.
2. ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்தரவு நாள். 31.07.2020

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ன்படி 01.04.2018, 01.04.2019 மற்றும் 01.04.2020 முதல் 15% வாடகை உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யும் பட்டியல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**சேரன் நகர் 213 சதுரடி (வார்டு எண். 05)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 500004 | 1 | அம்மா மருந்தகம் | 31.12.2017<br>31.12.2020 | 01.01.2018<br>01.01.2021 | 31.12.2020<br>31.12.2023 | 7,500/-<br>8,625/- | 8,625/-<br>9,919/- |
| 2 | 500005 | 2 | அம்மா மருந்தகம் | 31.12.2017<br>31.12.2020 | 01.01.2018<br>01.01.2021 | 31.12.2020<br>31.12.2023 | 7,500/-<br>8,625/- | 8,625/-<br>9,919/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**ஓணாப்பாளையம் ரோடு 10 * 16=120 சதுரடி (வார்டு எண். 05)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 520537 | 8 | எம்.முருகானந்தம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 8,625/- | 9,919/- |
| 2 | 520538 | 9 | சக்தி வேல் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,580/- | 12,167/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**MTP Road புதிய பேருந்து நிலையம் (வார்டு எண்.10)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிம ம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1020603 | 3 | Tamilnadu Govt Transport Corporation & Time Keeper Rome | 31.03.2017<br>31.03.2020 | 01.04.2017<br>01.04.2020 | 31.03.2020<br>31.03.2023 | 6,290/-<br>7,234/- | 7,234/-<br>8,319/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**நஞ்சம்மாள் வீதி (வார்டு எண். 11)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1100001 | 5 | அமுதம் அங்காடி | 30.11.2018 | 01.12.2018 | 30.11.2021 | 1,556/- | 1,789/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**சிறுவாணி ரோடு (வார்டு எண். 15)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1500001 | 1 | எ. மோகன் ராஜ் | 31.12.2020 | 01.01.2021 | 31.12.2023 | 9,500/- | 10,925/- |
| 2 | 1500002 | 2 | எஸ்.ரபேல் பாபு | 31.03.2020 | 01.01.2021 | 31.12.2023 | 5,500/- | 6,325/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடைகள் 10 *16=160 சதுரடி (வார்டு எண். 17)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1700019 | 4 | G.லட்சுமி | 30.06.2019 | 01.07.2019 | 30.06.2022 | 3,550/- | 4,083/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடைகள் 10 *16=160 சதுரடி (வார்டு எண். 17)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1700007 | 7 | G.பாலாஜி | 31.08.2020 | 01.09.2020 | 31.08.2023 | 6,650/- | 7,648/- |

**கிருஷ்ணசாமி ரோடு வடக்கு –17 x 10 = 170 ச.அடி**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2220018 | 1 | வி.டி பத்ருதீன் | 31.03.2019 | 01.04.2019 | 31.03.2022 | 8,536/- | 9,816/- |

**கிருஷ்ணசாமி ரோடு தெற்கு 17 * 10 =170 சதுரடி (வார்டு எண்.22)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2220027 | 2 | அப்துல் ஆஜீஸ் | 31.03.2019 | 01.04.2019 | 31.03.2022 | 5,108/- | 5,874/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**டி.பி ரோடு – 16 ½ x 11 = 182 ச.அடி (வார்டு எண். 23 )**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2320044 | 6 | T. பாலாஜி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2024 | 28,842/- | 33,168/- |
| 2 | 2320523 | 13 | P.B.சஜீவன் | 30.10.2019 | 01.11.2019 | 30.10.2022 | 1,06,950/- | 1,22,993/- |
| 3 | 2320524 | 12 | P.B.சஜீவன் | 30.06.2020 | 01.07.2020 | 30.06.2023 | 12,075/- | 13,886/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**மேட்டுபாளையம் ரோடு (வார்டு எண். 23)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2320528 | 1 | Social Welfare Office (Kenwyn School) | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 23,000/- | 26,450/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**இராமசந்திரா ரோடு 10 x 16=160 சதுரடி (வார்டு எண். 23)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 230309 | 9 | வெங்கடேஷ் பாபு | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 20,241/- | 23,277/- |
| 2 | 230310 | 10 | P.ரமேஷ் | 31.03.2019 | 01.04.2019 | 31.03.2022 | 16,099/- | 18,514/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**திருவேங்கட சாமி ரோடு 10 x 21=210 சதுரடி (வார்டு எண். 23)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 230202 | 2 | M.ரமேஷ் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 33,983/- | 39,080/- |
| 2 | 230203 | 3 | A.M.சம்சுஅலி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 30,015/- | 34,517/- |
| 3 | 230204 | 4 | A.M.சம்சுஅலி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 30,015/- | 34,517/- |
| 4 | 230206 | 6 | R.ஸ்ரீதர் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 21,505/- | 24,731/- |
| 5 | 230207 | 7 | R.ஸ்ரீதர் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 18,144/- | 20,866/- |
| 6 | 230214 | 12 | S.கௌசல்யா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 24,840/- | 28,566/- |
| 7 | 230215 | 13 | S.கௌசல்யா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 24,840/- | 28,566/- |

**ஆரோக்கியசாமி ரோடு கடைகள் 32 ½ x 11 ½ = 373.75 ச.அடி (ரூம்ஸ்) (வார்டு எண். 24)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2420251 | 13 | சீமா கண்ணா | 31.03.2019 | 01.04.2019 | 31.03.2022 | 4,678/- | 5,380/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**ஆரோக்கியசாமி ரோடு புதியவணிகவளாகம் சாஸ்திரி மைதானம்(புதிய கடைகள்) 10 x 16 = 160 ச.அடி**

**(வார்டு எண். 24)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 240001 | 1 | K.அருணகிரிராஜ் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 11,270/- | 12,961/- |
| 2 | 240005 | 5 | அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி | 30.09.2018 | 01.10.2018 | 30.09.2021 | 9,000/- | 10,350/- |
| 3 | 240005 | 6 | அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி | 30.09.2018 | 01.10.2018 | 30.09.2021 | 9,000/- | 10,350/- |
| 3 | 240008 | 8 | J.வில்சன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15,525/- | 17,854/- |
| 4 | 240009 | 9 | S.சுலோச்சனா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15,525/- | 17,854/- |
| 5 | 240010 | 10 | W. ஜெயந்தி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15,525/- | 17,854/- |
| 5 | 240013 | 13 | W. நவீன் ஜான் | 30.11.2018 | 01.12.2018 | 30.11.2021 | 11,400/- | 13,110/- |
| 6 | 240014 | 14 | V.P.பாரதிராஜா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,925/- | 12,564/- |
| 7 | 240016 | 16 | ஞானேந்திர பிரதாப் சிங் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,638/- | 12,234/- |
| 8 | 240017 | 17 | ப.மயில்சிங்காரம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 11,730/- | 13,490/- |
| 9 | 240018 | 18 | M.அமுதா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 11,500/- | 13,225/- |
| 10 | 240019 | 19 | J.U.இளங்கோ | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 14,950/- | 17,193/- |
| 11 | 240022 | 22 | A. சௌந்திரராஜன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,925/- | 12,564/- |
| 12 | 240023 | 23 | R.அய்யம்மாள் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,925/- | 12,564/- |
| 13 | 240029 | 29 | R.மகாலட்சுமி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 11,615/- | 13,357/- |
| 14 | 240030 | 30 | N.ஆறுமுகம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 11,615/- | 13,357/- |
| 15 | 240032 | 32 | S.ராமநாதன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 12,650/- | 14,548/- |
| 16 | 240033 | 33 | S.ராமநாதன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 13,455/- | 15,473/- |
| 17 | 240034 | 34 | R.முகம்மதுபாருக் & பார்டனர் | 30.06.2020 | 01.07.2020 | 30.06.2023 | 15,008/- | 17,529/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**ரங்கே கவுண்டர் வீதி நவீன மலர் அங்காடி 16 x 9.6 = 152 ச.அடி (வார்டு எண். 24)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2420552 | 2 | எ.ஆர்.முகமது யூனிஸ் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 9,919/- | 11,407/- |
| 2 | 2420559 | 9 | ஜப்பார் அலி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 10,580/- | 12,167/- |
| 3 | 2420560 | 10 | ஏம்.உஸ்மான் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 7,935/- | 9,125/- |
| 4 | 2420566 | 16 | கே.கார்த்திகேயன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 9,919/- | 11,407/- |
| 5 | 2420574 | 24 | எஸ் ஷாஜகான் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 5,290/- | 6,084/- |
| 6 | 2420575 | 25 | கே.கார்த்திகேயன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,960/- | 5,704/- |
| 7 | 2420583 | 33 | எ.அன்சாரி | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 5,290/- | 6,084/- |
| 8 | 2420584 | 34 | எ.எம்.முஸ்தபா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,960/- | 5,704/- |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2420585 | 35 | எம்.மாணிக்கம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,629/- | 5,323/- |
| 10 | 2420586 | 36 | எம்.முகமது சலீம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,960/- | 5,704/- |
| 11 | 2420588 | 38 | எம்.காதர்பாட்ஷா | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,695/- | 5,399/- |
| 12 | 2420589 | 39 | எ.பரமசிவம் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,761/- | 5,475/- |
| 13 | 2420590 | 40 | எ.என்.சக்திவேல் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,100/- | 4,715/- |
| 14 | 2420593 | 43 | பி.பாலு | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,166/- | 4,791/- |
| 15 | 2420594 | 44 | எஸ்.காஜா உசேன் | 31.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 4,100/- | 4,715/- |
| 16 | 2420612 | 2 | பண்ணை பசுமை நிலையம் | 31.10.2016 | 01.11.2016 | 31.10.2019 | 2,500/- | 2,875/- |
| | | | | 31.10.2019 | 01.11.2019 | 30.11.2022 | 2,875/- | 3,306/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**வார்டு எண். 24 பன்னீர் செல்வம் பூமார்கெட் மேடை கடைகள் 5 x 4 = 20 ச.அடி**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2420371 | A-2 | எஸ். நந்தகுமார் | 31.03.2012<br>31.03.2015<br>31.03.2018 | 01.04.2012<br>01.04.2015<br>01.04.2018 | 31.03.2015<br>31.03.2018<br>31.03.2021 | 3100/-<br>3565/-<br>4100/- | 3565/-<br>4100/-<br>4715/- |
| 2 | 2420386 | C-17 | வள்ளியம்மாள் | 31.10.2016<br>31.10.2019 | 01.11.2016<br>01.11.2019 | 31.10.2019<br>31.10.2022 | 2700/-<br>3105/- | 3105/-<br>3571/- |
| 3 | 2420411 | E-42 | புவியரசு | 30.09.2016 | 01.10.2016 | 30.09.2019 | 4500/- | 5175/- |
| | | | | 30.09.2019 | 01.10.2019 | 30.09.2022 | 5175/- | 5951/- |
| 4 | 2420512 | J-143 | கே. முஸ்தபா | 31.10.2019 | 01.11.2019 | 31.10.2022 | 1434/- | 1649/- |

மேற்படி 3 ஆண்டுகள் மற்றும் 6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு மாத வாடகையில் 15 % சதவீதம் உயர்வு செய்யலாம். கடையின் புதுப்பித்தல் கட்டணமும் செலுத்தி ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தப் பத்திரமும் பூர்த்தி செய்து ஒப்படைக்கவும் உயர்வு செய்த வாடகைக்கு ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டு வரலாம்.

மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1476 /2020/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 538 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண்–81 க்குட்பட்ட வெரைட்டி ஹால் சாலையில் அமைந்துள்ள சி.எம்.சி காலனி குடியிருப்பு பகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சி பணியாளர்கள் குடியிருந்து வருகின்றனர் இவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி வழங்கும் ஊதியத்திலிருந்து கட்டிடம் பதிவு செய்வதற்குண்டான தொகையினை சுகாதாரப்பிரிவின் மூலமாக பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் சி.எம்.சி காலனி வளாகத்திலுள்ள 13 பிரிவுகளில் (Block) மாடி கட்டிடங்களில் 432 வீடுகள் அமைந்துள்ளன. இக்கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையிலுள்ளதால் “அனைவருக்கும் வீடு” திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேற்கண்ட கட்டிடங்களை இடித்து புதிய வீடுகள் கட்டவும், இவ்வளாகத்திலுள்ள நபர்களுக்கு மீண்டும் புதிய கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்யவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு (Enter upon Permission) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அப்பகுதி மக்கள் அருகில் உள்ள மைதானத்தில் தற்காலிக குடியிருந்து வருகின்றனர். அப்பகுதிக்கு மழைநீர் வடிகால் அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பிடு (ரூ) |
|---|---|---|---|
| 1 | 6511 /2020/எம்டி5 | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் – வார்டு எண். 81 க்குட்பட்ட சி.எம்.சி காலனி மைதானத்தில் மழைநீர் வடிகால் கட்டுதல். | 21,50,000/– |

மேற்படி உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6511 /2020/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 539 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 62-ல் உள்ள என்.ஜி.ஆர் காலனி, வடக்கு வீதி மற்றும் கங்குவார் வீதி பகுதிகளில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை திரும்ப கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியானது பொதுமக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க, பணியின் அத்தியா அவசியத்தை கருத்தில் கொண்டும், நிர்வாக நலனை கருத்தில் கொண்டும் இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 62 | என்.ஜி.ஆர் காலனி, வடக்கு வீதி மற்றும் கங்குவார் வீதி பகுதிகளில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை திரும்ப கட்டும் பணி செய்தல்<br><br>ந.க.எண்.6514/2020/எம்.டி.3 | 15.50 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.6514/2020/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 540 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் 62-ல் உள்ள வடக்கு வீதி மற்றும் கங்குவார் வீதி பகுதிகளில் மறு சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 62 | வடக்கு வீதி மற்றும் கங்குவார் வீதி பகுதிகளில் மறு சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல்<br><br>ந.க.எண்.6513/2020/எம்.டி.3 | 19.50 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.6513/2020/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 541 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

**பொருள் :** பணியமைப்பு–1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொது சார்நிலை பணிவிதிகளின்கீழ் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியினை இளநிலை உதவியாளர் தனியாகவும், தட்டச்சர் பணியினை தனியாகவும் பிரிக்கவகை செய்து விதி திருத்தம் வெளியிடப்பட்டுள்ளஅரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை எண்.87 நகராட்சிநிர்வாகம் குடிநீர் வழங்கு துறை (எம்சி5) நாள்.19.08.2020.

––––––––

1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொதுசார்நிலை பணி விதிகளின் கீழான விதி 2–ல் வகுப்பு III பிரிவு III இனம் I–ல் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் (Junior Assistant cum Typist) என வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியினை இளநிலை உதவியாளர் (Junior Assistant) பதவி தனியாகவும், தட்டச்சர் (Typist) பதவி தனியாகவும் பிரித்து அரசாணை எண்.87 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு துறை (எம்சி5) நாள்.19.08.2020–ல் பின்வரும் விதி திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

In the said Rules :

(1) in rule 2. –

(a) under the heading “Group – III” for the expression “Junior Assistant –cum Typist” against the entry “Category 1”, the expression “Junior Assistant” shall be substituted;

(b) after the expression “Category 2 and its corresponding entry, the expression “Category 2-A… Typist” shall be inserted.

(2) in rule 3, in the Table ,-

(a) in column (2), for entry (ii) against the corresponding entry “Assistant” in column (1), the following entries shall be substituted, namely:-
(ii) by promotion from the holders of the post of Junior Assistant;
(iii) by transfer from the holders of the post of Steno-Typist; and
(iv) by promotion from the holders of the post of Typist.”;

(b) in column (1), for the expression “Junior Assistant-cum-Typist”, the expression “Junior Assistant” shall be substituted.

(c) in column (2), for entry (ii) against the corresponding entry “Steno-Typist” in column (1), the following entry shall be substituted, namely:-
“(ii) by promotion from the holders of the post of Typist”;

(d) after the expression “Steno-Typist” in column (1) and its corresponding entries in column (2) thereof, the following entries shall, respectively, be inserted, namely:-

| | | |
|---|---|---|
| “Typist..... | i) | By direct recruitment; or |
| | ii) | By transfer from the holders of the post in Category 1 in Group IV; or |
| | iii) | By promotion from the holders of posts in Categories 1 and 3 in Group V of this service”; |

(e) in column (2), for the entry against the corresponding entry “Conservancy Inspector” in column (1), the following entries shall be substituted, namely;-
(i) by transfer from the holders of the post of Junior Assistant; and
(ii) by transfer from the holders of the post of Typist”;

(f) in column (2), for the entry against the corresponding entry “Tax Collector” in column (1), the following entries shall be substituted, namely:-
“(i) by transfer from the holders of the post of Junior Assistant; and
(iii) by transfer from the holders of the post of Typist”;

(3) in rule 4, in the Table,-
(a) in column (3) against the corresponding entry “Assistant” in column (1), after entry (ii), the following proviso shall be inserted, namely:-
“Provided that five per cent of the estimated vacancies, in the category of Assistant in Corporation, shall be filled up by transfer from the post of Steno-typist, who has put in not less than eight years of service and opts for transfer as Assistant as on the 1st April of the year in which the selection is made.”;
(b) for the expression “Junior Assistant-cum-Typist” in column (1) and its corresponding entries in columns (2) and (3) thereof, the following entries shall, respectively, be substituted, namely:-

| | | |
|---|---|---|
| “Junior Assistant | By Direct recruitment and by promotion | Must have passed S.S.L.C Public Examination or its equivalent with eligibility for admission to Higher Secondary Course of studies (or) to College Course of Studies.”; |

(c) In column (3), for entry (i) against the corresponding entries “Steno-Typist” in column (1), the following entry shall be substituted, namely:-
“(i) Must have passed S.S.L.C. Public Examination or its equivalent with eligibility for admission to Higher Secondary Course of studies (or) to College Course of studies”;

(d) After the expression “Steno-Typist” in column (1) and its corresponding entries in column (2) and (3) thereof, the following entries shall, respectively, be inserted, namely:-

| | | | |
|---|---|---|---|
| “Typist | By Direct recruitment and by promotion | i) | Must have passed S.S.L.C Public Examination or its equivalent with eligibility for admission to Higher Secondary Course of studies (or) to College Course of Studies. |
| | | ii) | Must have passed English Type writing and Tamil Type writing of the Government Technical Examination in Senior Grade in anyone of them |
| | | iii) | Must have passed Computer Office Automation (COA).”; |

(e) In Column (3), for entry (i) against the corresponding entry “Tax Collectors” in Column (1), the following entries shall be substituted, namely:-
“(i) By transfer from the holders of the post of Junior Assistant who have completed their probation;
(i-a) By transfer from the holders of the post of Typist who have completed their probation”;

(4) For in rule 5, the following rule shall be substituted, namely:-
“5. Inter-se-Seniority between Junior Assistant, Steno-typist and Typist:- There shall be one common Seniority list in a corporation for the post of Junior Assistant, Steno-typist and Typist and the inter-se-seniority for the holders of the post of Junior Assistant, Steno-Typist and Typist shall be fixed based on the date of appointment to that post. If appointments to the posts of Junior Assistant, Steno-typist and Typist are made on the same date, the seniority accorded by the Appointment Committee shall be taken”,

(5) In rule 6, in the tabular column, after the expression “Group III Category 1 Junior Assistant” and the corresponding entries thereto, the following entries shall, respectively, be inserted namely:-

| | | |
|---|---|---|
| “Group III Category 2-A Typist | 2 | 1”. |

(6) (a)rule 8 shall be renumbered as sub-rule (1) of that rule;

(c) After sub-rule (1) as so renumbered, the following rule shall be added, namely:-

“(2) Every person appointed to the post of Junior Assistant and Typist by promotion shall, within the period of his probation, pass the Foundational Training Course prescribed for the Corporation Service”.

மேற்காணும்அரசாணை எண்.87 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு துறை (எம்சி5) நாள்.19.08.2020–ஐ மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –அனுமதிக்கலாம். ந.க.எண்.6422/2020/எம்.சி.9

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 542 நாள் 07.09.2020</u>**

பதிவு செய்யப்பட்டது.

---

**பொருள் எண் 8**

**பொருள் :** பணியமைப்பு– 1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொதுசார்நிலை பணிவிதிகளின் கீழ் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியினை இளநிலை உதவியாளர் தனியாகவும், தட்டச்சர் பணியினை தனியாகவும் பிரிக்கவகை செய்துவிதி திருத்தம் வெளியிடப்பட்டது– இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடம் பிரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பித்தல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை எண்.87 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு துறை (எம்சி5) நாள்.19.08.2020.

--------

பார்வையில் காணும் அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் தற்பொழுது அனுமதிக்கப்பட்ட இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் (Junior Assistant cum Typist) பணியிடத்திற்கு மிகாமல் பதவிகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதிபெற்று இளநிலை உதவியாளர் (Junior Assistant) பணியிடம் தனியாகவும், தட்டச்சர் பணியிடம் (Typist) பணியிடம் தனியாகவும் பிரிக்கஅரசாணை வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் (Junior Assistant cum Typist) பணியிடத்தினை, இளநிலை உதவியாளர் (Junior Assistant)பதவி தனியாகவும், தட்டச்சர் பதவி தனியாகவும் பிரிக்கப்படும் போது தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 127 (Junior Assistant cum Typist) பணியிடங்களுள் 111 பணியிடங்களை இளநிலை உதவியாளர் (Junior Assistant) பணியிடமாகவும், 16 பணியிடங்களை தட்டச்சர் (Typist) பணியிடமாகவும் பிரிக்கலாம். அவ்வாறு பிரிக்கப்படும் 16 தட்டச்சர் பணியிடங்களையும் ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா 2 தட்டச்சர் (Typist) வீதம் 5 மண்டலத்திற்கும் 10 தட்டச்சர் (Typist) பணியிடங்களாகவும், பிரதான அலுவலகத்திற்கு 6 (பொதுப்பிரிவு 1, பொதுக்கணக்கு பிரிவு1, பொதுசுகாதார பிரிவு–1, குடிநீர்விநியோகம் கணக்கு மற்றும் சேமநலநிதி கணக்கு பிரிவு 1, பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப்பிரிவு 1, நகரமைப்பு பிரிவு1) தட்டச்சர் பணியிடங்களாகவும் பகிர்ந்து கொள்ளலாம். இது கோப்பு எழுதும் இளநிலை உதவியாளர் (111) + உதவியாளர்கள் (38) (File Dealing Junior Assistant (111) + Assistant (38) மற்றும் தட்டச்சர் (Typist) (16) ஆகிய பணியிடங்களுக்கு இடையில் 9:1 என்ற விகிதமாகும்.

மேற்கூறியவாறு இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட **127** இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் (Junior Assistant cum Typist) பணியிடங்களை **111** இளநிலை உதவியாளர் (Junior Assistant) பணியிடங்களாகவும், **16** பணியிடங்களை தட்டச்சர் (Typist) பணியிடங்களாகவும் பிரித்து பார்வையில் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள விதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ளவும், மேற்படி புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் (Junior Assistant) மற்றும் தட்டச்சர் (Typist) பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் பின்னேற்பு அனுமதியும் பெறலாம். தட்டச்சர் பணியிடங்களை பொறுத்தவரை தற்போது உள்ள இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர்கள் பதவி உயர்வு மற்றும் பணி ஒய்வு பெறும் நிலையில் படிப்படியாக பூர்த்தி செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –அனுமதிக்கலாம். ந.க.எண்.**6422/2020**/எம்.சி.**9**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 543 நாள் 07.09.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் – மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் ரூ.**168.00** கோடியில் பணி நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவுற்றபின் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வந்த பின்பு ஏற்கனவே இருக்கும் காந்திபுரம் பகுதியில் **3** ஏக்கர் பரப்பளவில் உள்ள பேருந்து நிலையம் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கும் ஆகையால் காந்திபுரம் நஞ்சப்பா சாலையில் **3** ஏக்கர் பரப்பளவிலுள்ள பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தும் பணியினை PPP mode மூலமாக பணி செய்ய திட்ட ஆலோசகர் (Project Development Grant Fund) நியமித்து TNUIFSL-க்கு திட்ட பணிகள் குறித்து அறிக்கை அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.**6649** /**2020**/MD**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 544 நாள் 07.09.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண் **55** க்குட்பட்ட வடக்கு மண்டல அலுவலகத்திற்கு கோப்பு பதிவறை மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ |
|---|---|---|---|
| 1 | **6568/2020/எம்.டி.2** | வார்டு எண் **55**-க்குட்பட்ட வடக்கு மண்டல அலுவலகத்திற்கு கோப்பு பதிவறை மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல். | **11,70,000/-** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**6568/2020**/எம்.டி.**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 545 நாள் 07.09.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்துார் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 89-க்கு உட்பட்ட பகுதியில் உயர்திரு ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகள் அவர்களின் களஆய்வு மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு சந்திப்பின்போது கீழ்க்கண்ட அபிவிருத்தி பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 89 | வார்டு எண் 89-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விளையாட்டு வளாகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைத்தல்<br>ந.க. எண்: 6385/2020 / எம்.டி.4 | 28.50 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க. எண்: 6385/2020 / எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 546 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் :- கோயம்புத்துார் மாநகராட்சி – பொதுசுகாதார பிரிவு - திடக்கழிவு மேலாண்மை – மேற்குமண்டல பகுதி- கனரக வாகன ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம் செய்யப்பட்டது - ஒப்பந்ததாரரின் பணிக்காலம் நிறைவடைந்தது காலநீட்டிப்பு செய்தது - 2020- 2021ம் ஆண்டிற்கு ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி வழங்குதல்- ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்தல்-தொடர்பாக.

மாமன்றதீர்மான எண் 70 நாள் 07.03.2019-ன்படி மேற்குமண்டல வார்டு பகுதிகளில் குப்பைகள் அகற்ற இயக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு ஒப்பந்த ஓட்டுநர்களைக்கொண்டு பணிமேற்கொள்ள ஜீன் 2019 முதல் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்ததாரர் தி/ள். ஒசூர் பில்டர்ஸ், ஒசூர் ,நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது.இப்பணிக்காலம் நவம்பர் 2019ம் மாதம் முடிவடைந்த நிலையில் பார்வை 2-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை 01.12.2019 முதல் இப்பணிக்கு கால நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது 2020-2021-ம் ஆண்டிற்கு ஒப்பந்த பணியாளர்களுக்கு அரசின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியலின்படி ஓட்டுநர்களின் தினக்கூலி மறுநிர்ணயம் செய்யப்படவேண்டியுள்ளதாலும் மற்றும் 2020-2021-ம் ஆண்டிற்கு மேற்படி பணிக்கு புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்ய வேண்டியுள்ள காரணத்தாலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கு மண்டல பகுதிகளில் குப்பைகள் அகற்றும் வாகனங்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் 32 ஒப்பந்த கனரக வாகன ஓட்டுநர்களைக் கொண்டு ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின மதிப்பீடு ரூ 45,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்: 4471/2020 / எம்.இ.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 547 நாள் 07.09.2020**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென அர்ப்பணிக்கப்பட்ட பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு அனுதினமும் சுமார் 125 மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத குடிநீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தலைமை நீரேற்று நிலையத்திற்கான வருடாந்திர இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான தற்போதைய ஒப்பந்தம் வரும் 31.10.2020 உடன் முடிவடைகிறது. அடுத்து வரும் 01.11.2020 முதல் ஓராண்டு காலத்திற்கான வருடாந்திர இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ரூ. 55.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6661 / 2020 / ஜே. என்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 548 நாள் 07.09.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) பெ. குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப.,
ஆணையர் /தனி அலுவலர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி